Kalanjiyam - International Journal of Tamil Studies களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Volume: 4 | Issue 1 | January 2025 | eISSN: 2456-5148

களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

‘

# A Graphical Comparison between Tamil and Korean Languages

# வரிவடிவ ஒப்பாய்வு நோக்கில் தமிழ் மற்றும் கொரிய மொழி

***[1]வி புவனா, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், 7092722668,**
**bhuvanav_phd@maher.ac.in, https://orcid.org/0009-0006-6282-0313**
**[2]முனைவர் க அமலா கார்த்திகா, 95668 01496, gamalakarthiga@maherfhs.ac.in,**
**https://orcid.org/0000-0002-2746-3035**
***[1,2]தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக் கழகம்) சென்னை,**
**V Bhuvana, Research Scholar, bhuvanav_phd@maher.ac.in**, https://orcid.org/0009-0006-6282-0313
**Dr G Amala karthiga, Assistant Professorgamalakarthiga@maherfhs.ac.in**, https://orcid.org/0000-0002-2746-3035
***[1,2]Department of Tamil, Faculty of Humanities and Science, Meenakshi Academy of Higher Education and Research (Deemed to be University) Chennai, Tamil Nadu, India.**

**Abstract**

A country located in Northeast Asia, Koreans are similar to Tamils in language, culture, and traditions. It is known through archaeological researches that Tamil script, Brahmi, cursive script was used in many archaeological monuments such as inscriptions, coins, middle stones and meikirthi found so far in the Tamil writing system. This typeface is similar in appearance to the Hangul typeface that may be found in Korea in some places and slightly different in others. This review paper is designed to examine the literary connection between the Tamil language and the Korean language as a focus.

**ஆய்வுச்சுருக்கம்**

வட கிழக்கு ஆசியாவில் அமைந்திருக்கும் நாடான கொரிய நாட்டு மக்கள் மொழி, பண்பாடு, மற்றும் தமிழர் மரபுகள் என்பவற்றில் தமிழர்களோடு ஒத்து காணப்படுகின்றனர். தமிழ் எழுத்து முறையில் இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், நடுகற்கள் மற்றும் மெய்க்கீர்த்திகள் போன்ற பல தொல்லியல் தொன்மங்களில் எழுத்து வரிவடிவமாக தமிழி, பிராமி, வட்டெழுத்து, போன்ற வரிவடிவங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதைத் தொல்லியல் ஆராய்ச்சிகள் மூலம் அறிய முடிகிறது. இவ்வெழுத்து வரிவடிவமானது கொரிய நாட்டில் வழக்கில் இருக்கக்கூடிய ஹங்குல் வரிவடிவத்துடன் சில இடங்களில் ஒத்தும் சில இடங்களில் சற்று மாறுபட்டிருந்தாலும் பார்ப்பதற்கு ஒத்திருப்பது போன்றே தோற்றமளிப்பதனை மையமாகக் கொண்டு தமிழ் மொழி மற்றும் கொரிய மொழியில் உள்ள எழுத்தியல் தொடர்பினை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

KALANJIYAM

**திறவுச் சொற்கள்** தமிழி, தமிழ் எழுத்து, தமிழ் வட்டெழுத்து, வரிவடிவம், ஹங்குல், கொரியா.

**முன்னுரை**

தென் திராவிட மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள், கிரந்த எழுத்துகள் ஆகிய எழுத்து வகைகள் இருப்பது போன்றே கொரியாவில் தற்போது பேச்சு வழக்கு மற்றும் எழுத்து வழக்கில் இருக்கும் ஹங்குல் என்னும் மொழியிலும் உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள், கிரந்த எழுத்துகள் என வகைப்படுத்தியுள்ளனர். சமஸ்கிருதம், ஹிந்தி, கன்னடம் போன்ற மொழிகளில் எழுத்துகளின் வகைகளைக் குறிப்பதற்கு **'வர்க்கம்'** என்ற சொல் கையாளப்படுகிறது. ஆனால், தமிழ் மொழியில் எழுத்துகளைக் குறிக்க வர்க்க வேறுபாடுகள் இல்லை. ஹங்குல் மொழியிலும் எழுத்துகளின் வேறுபாடுகளைக் குறிக்க வர்க்க வேறுபாடுகள் இல்லை[1]. தமிழ் மொழியில் காணக்கிடைக்கும் தமிழி, பிராமி, வட்டெழுத்து, தமிழ் எழுத்து வரிவடிவங்களுடன் ஹங்குல் (한글) மொழியின் எழுத்து வரிவடிவமான ஹங்குக் (한국) ஒன்றுபட்டு காணப்படுவதால் தமிழ் மொழியுடன் ஹங்குல் மொழி பன்னெடுங்காலமாகவே உறவுகொண்டிருக்க வேண்டும். தமிழ் மொழிக்கும் கொரிய மொழிக்கும் இடையே உள்ள வரிவடிவ ஒப்புமைகளை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**வரிவடிவம்**

தமிழ் மொழி வரிவடிவங்களாகத் தமிழி, வட்டெழுத்து, தமிழ் எழுத்து, தென்பிராமி, கிரந்தம் போன்ற வரிவடிவங்கள் கிடைக்கிறது. ஹங்குல் என்றழைக்கப்படும் கொரிய மொழியும் ஹங்குக்(한국) வரிவடிவத்தினைக் கொண்டுள்ளது.

---

[1] முனைவர் நா. கண்ணன், கொரியாவின் தமிழ் ராணி, ப-63.

Volume: 4 | Issue 1 | January 2025 | eISSN: 2456-5148

## தமிழி, தமிழ் எழுத்து, தமிழ் வட்டெழுத்து

“இந்தியாவில் நமக்கு கிடைத்துள்ள மிகப் பழமையான கல்வெட்டு என மீனாட்சிப்புரக் கல்வெட்டினைக் குறிப்பிடுவதோடு இதன் காலத்தை கி.மு 4ஆம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்கிறார்”[2]. இதில் பொறித்திருக்கும் வரிவடிவமானது தமிழி வரிவடிவமாகும். இவ்வரிவடிவம் அசோகரது காலத்திற்கும் முந்தையது ஆகையால் பிராமி மற்றும் தமிழ் வட்டெழுத்து வரிவடிவங்களுக்குப் பிறப்பிடமாகக் கொள்ள இடமுண்டு.

## ஹங்குல்

உலகின் மிகப் பழைய மொழிகளில் ஒன்றானது கொரிய மொழி. இம்மொழி பன்னெடுங்காலமாக சீன மொழி மற்றும் ஜப்பான் மொழியின் எழுத்து வரிவடிவத்திலேயே பயன்படுத்தப்பட்டு வந்தது. “ஜப்பான் மொழியான கொனிஷிகி (Konishiki)ஐ சரளமாக வாசிக்க காஞ்சி, ஹிரகானா, கடகானா ஆகிய மூன்று வரிவடிவங்கள் தெரிந்திருக்க வேண்டியதாக இருந்திருக்கிறது”[3]. இவ்வரிவடிவம் பயன்படுத்துவதற்குக் கடினமாக இருந்த காரணத்தினாலேயே “சேஜோங் மன்னன் 1443ஆம் ஆண்டு ஹங்குல் என்னும் மொழியினைப் பயன்பாட்டில் கொண்டு வருகிறார். இவற்றை எர்த் (Earth) - ___, மேன் (Man) - | ஹெவன் (Heaven) - என மூன்று விதிகளாக உட்படுத்துகிறார். உயிர் எழுத்துகள் மோவும் (모음) எனவும் மெய் எழுத்துகள் ஜாவும் (자음) எனவும் வகமைப்படுத்தியுள்ளார். ஹங்குலானது பயன்படுத்த எளிதாக உள்ளது மற்றும் அதன் வரிவடிவம் தமிழ் வரிவடிவத்தோடு ஒத்திருப்பதைக் காணமுடிகிறது”[4].

---

[2] ஆ. ஜெகதீசன், தமிழ் இலக்கியத்தில் கல்வெட்டியல் கூறுகள் பக் – 11,12

[3] முனைவர் நா. கண்ணன், கொரியாவின் தமிழ் ராணி, ப-60.

[4] முனைவர். ஹரிபாலன் பெருமாள், தமிழ் வழி கொரிய மொழி கற்றல், ப-1.


KALANJIYAM

தமிழில் உயிர், மெய், உயிர்மெய் ஆகிய எழுத்துகளின் வகைகள் இருப்பது போன்று கொரிய நாட்டு மொழியிலும் காணமுடிகிறது.

**ஹங்குல் வரிவடிவம்**

தமிழ் மொழியின் தொன்மையான வடிவமான தமிழி, வட்டெழுத்து, தமிழ் ஆகிய வரிவடிவமும் கொரிய வரிவடிவமும் சில இடங்களில் ஒத்துப்போகிறது. இதன் வரலாறாக "சேஜோங் தமிழை முன் மாதிரியாகக் கொண்டான் என்பதற்கு அவன் தமிழிலிருந்து கடன் கொரிய மொழியின் எழுத்துகளை தமிழ் மொழியிலிருந்து கடன் வாங்குகிறார்".[5] இதன் மூலம் தமிழிலிருந்து கொரிய மொழியின் வரிவடிவம் தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

**19 மெய்யெழுத்துக்கள்**

| எழுத்து | | ㄱ | ㄲ | ㄴ | ㄷ | ㄸ | ㄹ | ㅁ | ㅂ | ㅃ | ㅅ | ㅆ | ㅇ | ㅈ | ㅉ | ㅊ | ㅋ | ㅌ | ㅍ | ㅎ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொடக்கம் | உட்சரிப்பு | க | க்க | ன | ட | ட்ட | ள/ ர | ம | ப | ப்ப | ஸ | ஸ்ஸ | (சத்தமில்லை) | ஜ | ஜ்ஜ | மச்**ச**ம் | **க**த்தி | த | **ப**சு | ஹ |
| | ஆங்கில ஒலிபெயர்ப்பு (ஐ.பி.ஏ) | g /k/ | kk /k͈/ | n /n/ | d /t/ | tt /t͈/ | r/l /r/ | m /m/ | b /p/ | pp /p͈/ | s /s/ | ss /s͈/ | silent | j /tɕ/ | jj /t͈ɕ/ | ch /tɕʰ/ | k /kʰ/ | t /tʰ/ | p /pʰ/ | h /h/ |
| இறுதி | உட்சரிப்பு | க் | | ன் | த் | – | ள் | ம் | ப் | – | த் | | ங் | த் | – | த் | க் | த் | ப் | த் |
| | ஆல ஒலிபெயர்ப்பு (ஐ.பி.ஏ) | k [k̚] | | n /n/ | t [t̚] | | l [l] | m /m/ | p [p̚] | | t [t̚] | | ng /ŋ/ | t [t̚] | | t [t̚] | k [k̚] | t [t̚] | p [p̚] | t [t̚] |

காட்சிப் படம்: 1

[5] முனைவர் நா. கண்ணன், கொரியாவின் தமிழ் ராணி, பக்-63

21 உயிரெழுத்துக்கள்

| எழுத்து | ㅏ | ㅐ | ㅑ | ㅒ | ㅓ | ㅔ | ㅕ | ㅖ | ㅗ | ㅘ | ㅙ | ㅚ | ㅛ | ㅜ | ㅝ | ㅞ | ㅟ | ㅠ | ㅡ | ㅢ | ㅣ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உட்சரிப்பு (எ.கா.) | அ அப்பா | இ~எ யெடம்/ இடம்[1] | ய யானை | யெ யேன்ன/ எந்த[1] | அ[2] வணக்கம் | எ எண் | ய[2] பயம் | யெ | ஒ ஒடு | வ[3] வண்டு | வி~வெ[3] வேலை[1] | வெ[1,3] வெண் | யொ | உ உன் | வ[2] அவன் | வே[3] வேல் | உ[2]~வி[3] விண் | யு யுவன் | உ[2] அழகு | உ[2]~இ வடிவு[1] | இ இவன் |
| ஆங்கில ஒலிபெயர்ப்பு | a | ae | ya | yae | eo | e | yeo | ye | o | wa | wae | oe | yo | u | wo | we | wi | yu | eu | ui/ yi | i |
| (ஐ.பி.ஏ) | /a/ | /ɛ/ | /ja/ | /jɛ/ | /ʌ/ | /e/ | /jʌ/ | /je/ | /o/ | /wa/ | /wɛ/ | /ø/ ~ [we] | /jo/ | /u/ | /wʌ/ | /we/ | /y/ ~ [ɥi] | /ju/ | /ɯ/ | /ɰi/ | /i |

காட்சிப்படம்: 2

| + | ㄱ g | ㄴ n | ㄷ d | ㄹ r | ㅁ m | ㅂ b | ㅅ s | ㅇ o | ㅈ j | ㅊ ch | ㅋ k | ㅌ t | ㅍ p | ㅎ h |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ㅏ a | 가 ga | 나 na | 다 da | 라 ra | 마 ma | 바 ba | 사 sa | 아 a | 자 ja | 차 cha | 카 ka | 타 ta | 파 pa | 하 ha |
| ㅑ ya | 갸 gya | 냐 nya | 댜 dya | 랴 rya | 먀 mya | 뱌 bya | 샤 sya | 야 ya | 쟈 jya | 챠 chya | 캬 kya | 탸 tya | 퍄 pya | 햐 hya |
| ㅓ eo | 거 geo | 너 neo | 더 deo | 러 reo | 머 meo | 버 beo | 서 seo | 어 eo | 저 jeo | 처 cheo | 커 keo | 터 teo | 퍼 peo | 허 hya |
| ㅕ yeo | 겨 gyeo | 녀 nyeo | 뎌 dyeo | 려 ryeo | 며 myeo | 벼 byeo | 셔 syeo | 여 yeo | 져 jyeo | 쳐 chyeo | 켜 kyeo | 텨 tyeo | 펴 pyeo | 혀 hyeo |
| ㅗ o | 고 go | 노 no | 도 do | 로 ro | 모 mo | 보 bo | 소 so | 오 o | 조 jo | 초 cho | 코 ko | 토 to | 포 po | 호 ho |
| ㅛ yo | 교 gyo | 뇨 nyo | 됴 dyo | 료 ryo | 묘 myo | 뵤 byo | 쇼 sya | 요 yo | 죠 jyo | 쵸 chyo | 쿄 kyo | 툐 tyo | 표 pyo | 효 hyo |
| ㅜ u | 구 gu | 누 nu | 두 du | 루 ru | 무 mu | 부 bu | 수 su | 우 u | 주 ju | 추 chu | 쿠 ku | 투 tu | 푸 pu | 후 hu |
| ㅠ yu | 규 gyu | 뉴 nyu | 듀 dyu | 류 ryu | 뮤 myu | 뷰 byu | 슈 syu | 유 yu | 쥬 jyu | 츄 chyu | 큐 kyu | 튜 tyu | 퓨 pyu | 휴 hyu |
| ㅡ eu | 그 geu | 느 neu | 드 deu | 르 reu | 므 meu | 브 beu | 스 seu | 으 eu | 즈 jeu | 츠 cheu | 크 keu | 트 teu | 프 peu | 흐 heu |
| ㅣ i | 기 gi | 니 ni | 디 di | 리 ri | 미 mi | 비 bi | 시 si | 이 i | 지 ji | 치 chi | 키 ki | 티 ta | 피 pi | 히 hi |
| ㅐ ae | 개 gae | 내 nae | 대 dae | 래 rae | 매 mae | 배 bae | 새 sae | 애 ae | 재 jae | 채 chae | 캐 kae | 태 tae | 패 pae | 해 hae |

காட்சிப்படம்: 3













## தமிழ் – ஹங்குல் எழுத்துகள்

இவை இரண்டு வெவ்வேறு மொழிகளுக்கு உரித்தான எழுத்துகளின் வரிவடிவங்களை ஆராயின் இரண்டும் வெவ்வேறு மொழியானாலும் அவை கட்டமைப்பில் தமிழில் க்+அ=க எனவும் கொரிய மொழியில் ㄱ+아=가 எனவும் ஒன்றுபோல் இருப்பதைக் காணமுடிகிறது.

Volume: 4 | Issue 1 | January 2025 | eISSN: 2456-5148

**ஒலி ஒற்றுமையுடன் காணப்படும் எழுத்துகள்**

கொரிய மொழியில் 'ல'கர 'ர'கர ஒலிக்கு பயன்படுத்தப்படும் 'ㄹ' எழுத்தானது தமிழில் வட்டெழுத்துடன் ஒத்துப்போகிறது. இது தமிழில் காணப்படும் சீரான முறையில் இருந்து சற்று மாறி மற்றும் அதே வடிவத்தில் தோற்றமளிக்கிறது. 'ㄴ' நகர ஒலியுடைய எழுத்தானதும் வட்டெழுத்துடனே ஒரே வடிவில் இருப்பதைக் காணமுடியும். 'ㄷ'என்னும் டகர ஒலியுடைய எழுத்தும் வேறுபாடின்றி ஒன்றுபோல கிடைக்கிறது. 'ㅂ' பகர ஒலி மற்றும் 'ㅁ' மகர ஒலியினைத் தரக்கூடிய இவ்விரு ஹங்குல் எழுத்துகளும் தமிழ் எழுத்துகளுடன் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவும் மாறுபட்டாலும் ஒரே மாதிரியான வடிவத்தினைக் கொடுக்கிறது. 'ㅋ' ககர ஒலியின் எழுத்தானது தமிழ் எழுத்துடன் ஒத்துப்போகிறது. உயிர் எழுத்தான ஈகாரம் தனது இரு பக்கங்களிலும் புள்ளியினைக் கொண்டுள்ளது. ஆனால் ஹங்குளில் புள்ளியின்றி காணப்படுகிறது. இவ்வாறு தமிழி, தமிழ் எழுத்து, தமிழ் வட்டெழுத்துகளுடன் கொரிய மொழியான ஹங்குல் மொழி எழுத்துகள் ஒத்துப்போகும் விதத்தினைக் காணமுடிகிறது.

| ஹங்குல் | ஒலி வடிவம் | தமிழி | தமிழ் எழுத்து | தமிழ் வட்டெழுத்து | ஒலி வடிவம் |
|---|---|---|---|---|---|
| ㄹ | ர/ல |  |  |  | ல |
| ㄴ | ந/ன/ண |  |  |  | ந |
| ㄷ | ட/த |  |  |  | ட |
| ㅂ | ப |  |  |  | ப |
| ㅁ | ம |  |  |  | ம |
| ㅋ | க |  |  |  | க |
| ㅣ | இ/ஈ |  |  |  | ஈ |

KALANJIYAM

**அட்டவணை படம்:** 1

**முடிவுரை**

தமிழகம் மற்றும் கொரியா ஆகிய இவ்விரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவு கலப்புத்திருமணம், வணிகம், வேலை நிமித்தமாகவும் இடம் பெயர்தல் நிகழ்ந்திருக்க வாய்புண்டு. மொழியின் வளத்தை உலக நாடுகளுக்குக் கொண்டு செல்லும்பொருட்டு நடந்திருக்கும் மொழியாக்க முயற்சிகளாலும் கொரிய மொழியுடனானந்தொடர்புகள் நிகழ்ந்திருக்க வழியுண்டு. தமிழின் பண்டைய வரிவடிவமும் கொரிய வரிவடிவமும் ஒத்துப்போவதால் பண்டைய காலத்திலேயே இவ்விரு நாடுகளுக்கும் உறவு இருந்திருக்கலாம் என்பதையும் அறிய முடிகிறது. பண்டைய தமிழி எழுத்து முறையும் சேஜோங் கொண்டு வந்த எர்த், மேன் மற்றும் ஹெவன் முறையும் நீட்டல் கோடு, படுத்தல் கோடு மற்றும் புள்ளி ஆகியவை கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் கொரியாவில் தற்போது வழக்கத்தில் இருக்கும் அச்சுப்பிரதி எழுத்துகள் மற்றும் தமிழ் மொழியில் தமிழ் வரிவடிவங்கள் சான்றாக கொடுக்கப்பட்டுள்ளது இரு மொழி வரிவடிவங்களையும் ஒப்பாய்வு செய்து ஒன்றுபோல் காணப்படும் இடங்களை இவ்வாய்வுக்கட்டுரை கண்டறிந்துள்ளது.

**எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகள்**

சேஜோங் காலத்தில் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்பாட்டில் இருந்த எழுத்துகளையும் அவருக்கு பின் தோன்றிய இலக்கியங்களில் உள்ள எழுத்துகளையும் கொண்டு தமிழி வரிவடிவத்தோடு ஒப்பாய்வு செய்தால் பல எழுத்துகள் தமிழ் வரிவடிவத்தோடு ஒத்திருப்பதை கண்டறிய முடியும்.

காட்சிப்படம் 1 மற்றும் 2ற்கான இணைப்பு:

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%85%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF

KALANJIYAM

%81%E0%AE%B2%E0%AF%8D_%E0%AE%8E%E0%AE%B4%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%AE%E0%AF%81%E0%AE%B1%E0%AF%88

## உதவிய நூல்களும் கட்டுரைகளும்

[1] The Korean Alphabets

[2] இராசேந்திரன் பொ, சாந்தலிங்கம் சொ, கல்வெட்டுக் கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2022.

[3] உமர் பாரூக். அ - ஜெய்கணேஷ். மு, தமிழி பழந்தமிழ் எழுத்துப் பயிற்சி நூல், டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2023.

[4] கண்ணன் நா, *கொரியாவின் தமிழ் ராணி,* ஆழி பப்ளிஷர்ஸ், முதல் பதிப்பு, சென்னை, 2017.

[5] ஹரிபாலன் பெருமாள், தமிழ் வழி கொரிய மொழி கற்றல், lulu.com, 2021.

[6] ஜெகதீசன் ஆ, தமிழ் இலக்கியத்தில் கல்வெட்டியல் கூறுகள், ராமையா பதிப்பகம், நாங்காம் பதிப்பு, சென்னை, 2017

. This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

KALANJIYAM